பக்கங்கள்:-17

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 27 | வியாழக்கிழமை | 12.09.2024 | அதிர்வு 041

## தேர்தல் தோல்வியை ஏற்றுக்கொண்ட ரணில்

### விளாசித் தள்ளிய சஜித்



"தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதாரத்தைச் சுருக்கி மக்களின் மீது சுமையை 06



# சஜித், அநுர வந்தால் மீண்டும் அழிவுதான்!

### திருக்கோவில் பிரசாரக் கூட்டத்தில் ரணில் எச்சரிக்கை

செப்டெம்பர் 21ஆம் திகதி நாட்டை உருவாக்க எரிவாயு சிலிண்டருக்கு வாக்களிக்க வேண்டும் என்று வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சஜித்துக்கும் அநுரவுக்கும் நாட்டைக் கட்டியெழுப்ப எந்தத் திட்டமும் இல்லை எனவும், அவர்களிடம் நாட்டை ஒப்படைத்தால் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும் எனவும் தெரிவித்தார். 06




## தமிழீழக் கனவு நனவாக ஒருபோதும் இடமளியேன்

### மொட்டு வேட்பாளர் நாமல் தெரிவிப்பு

"வடக்கு, கிழக்கு இணைப்புக்கு சில கட்சிகள் கொள்கை ரீதியில் ஆதரவு தெரிவிக்கின்றன. இதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். விடுதலைப் புலிகள் அன்று கோரிய தமிழீழக் கனவு நனவாக ஒருபோதும் இடமளியேன்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பரப்புரைக் கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "நாம் ஒற்றையாட்சியைப் பாதுகாப்போம். மாகாண 06






இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூடி ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவை எடுத்து பத்து நாளளுக்கு மேலாகி விட்ட போதிலும் அந்த முடிவின் அடிப்படையிலான பிரசாரத்தில் கட்சி இன்னும் முழுமூச்சாக இறங்கவில்லை.

யுத்தம் முடிவுற்ற பின்னர் 2010, 2015, 2019 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் தான் ஆதரித்த வேட்பாளர்களான சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாஸ ஆகியோருக்காக அப்போது தமிழ்க் கூட்டமைப்பின் கீழ் இயங்கிய தமிழரசுக் கட்சி முழுமூச்சாகப் பிரச்சாரம் செய்தது என்பது உண்மையே. 06




# வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு ரணிலால் மட்டுமே தீர்வு வழங்க முடியும்

## பரப்புரைக் கூட்டத்தில் திலீபன் எம்.பி. தெரிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மட்டுமே வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க முடியும் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து கிளிநொச்சியில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“இன்று மக்களைப் பலரும் தவறாக திசை திருப்பி விட முயற்சிக்கின்றார்கள். காணி உறுதிகள் அற்ற மக்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினாலேயே தீர்வு வழங்க முடியும். சஜித் பிரேமதாஸ அறைகுறையான வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்து மக்களை நடுத் தெருவில் விட்டுள்ளார்.

மறுமுனையில் அநுரகுமார திஸாநாயக்க பற்றி இளையோர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அந்தக் கட்சியின் வரலாறு என்னவென்பது மக்களுக்குத் தெரியும். எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மட்டுமே வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க முடியும்.

அநுரவையோ சஜித்தையோ மக்கள் தெரிவு செய்யும் பட்சத்தில் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சி மக்களுக்குச் சுத்தமான குடிதண்ணீர் கிடைக்க வழி செய்தார்.

அன்று அரசை ஒப்படைத்தபோது ஏற்காதவர்கள் வீட்டின் நிர்மாணம் முழுமையாகக் கட்டிய பின்னர் வந்து குடியமரலாம் என்று நினைக்கின்றார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பற்றி பல பொய்களைச் சொன்னாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடைமுறைச் சாத்தியமான விடயங்களை மட்டுமே செய்வார்.” – என்றார்.

# நல்ல வைத்தியரை மாற்றினால் என்ன நடக்கும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்

## ரணிலை ஆதரிக்கும் பிரசாரத்தில் அலி சப்ரி உரை

“நல்ல வைத்தியரிடம் நீங்கள் சிகிச்சைக்குச் சென்று அதனால் நல்ல பலன் கிட்டும்போது, அந்த வைத்தியரை மாற்றினால் என்ன நடக்கும் என்பதை மக்களாகிய நீங்கள் சிந்திக்க வேண்டும்.”

– இவ்வாறு அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று புதன் கிழமை நடைபெற்ற “ரணிலால் இயலும்“ வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“இரண்டு வருடங்களுக்கு முன்பு நாடு பெரும் இக்கட்டான நிலைமையில் இருந்தது. அப்போது ஐ.எம்.எப். நாட்டில் அனைவரையும் ஒன்றுபட்டுச் செயற்பட முன்வருமாறு வலியுறுத்தியது. ஆனால், எதிர்க்கட்சியினர் அதற்கு முன்வரவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் சஜித்துக்கு பிரதமர் பதவியை வழங்கவும் தயாராக இருந்தோம். அப்போதும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அன்று மக்கள் பட்ட கஷ்டங்கள் இன்று உள்ளனவா என்பதை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நல்ல வைத்தியரிடம் நீங்கள் சிகிச்சைக்குச் சென்று அதனால் நல்ல பலன் கிட்டும்போது, அந்த வைத்தியரை மாற்றினால் என்ன நடக்கும் என்பதையும் மக்களாகிய நீங்கள் சிந்திக்க வேண்டும்.

சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை சமூகத்துடன் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். சில கட்சிகள் தெற்கின் கட்சிகள் செல்லும் திசைக்கு எதிர்த்திசையில் பயணிக்க வேண்டும் என்பதையே கொள்கையாகக் கொண்டுள்ளனர்.




சிறுபான்மை மக்களின் கோரிக்கைகள் அனைத்தையும் தருவதாக ஜனாதிபதி உறுதியளித்த பின்பும் அவருக்கு ஆதரவளிப்பதற்கு என்ன தடையிருக்கின்றது?

எனவே, மிகவும் இக்கட்டான நிலையில் இருப்பதால் நாட்டிலிருக்கும் வலுவான தலைவரே நாட்டை மீட்க வேண்டும். சஜித் கூறுவதைப் போல் வெளிநாட்டு செல்வந்தர்களின் உதவிகளை மட்டும் நாம் நம்பியிருக்க முடியாது. ஜே.வி.பி. ஒரு கொள்கையில்லாத கட்சியாகச் செயற்படுகின்றது. எனவே, நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்ட அனுபவம் மிக்க தலைவருக்கு நாம் இடமளித்தால் அடுத்த ஐந்து வருடங்களும் செழிப்பான நாடு எமக்குக் கிடைக்கும்.” – என்றார்.



# ரணில் விக்கிரமசிங்கவுக்கான மக்கள் ஆதரவு அதிகரிக்கிறது

## ராஜித நம்பிக்கை



“ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கான மக்கள் ஆதரவு அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. வீடுவீடாக சென்று மக்களை தெளிவுபடுத்த ஆரம்பித்ததன் மூலம் இந்த மாற்றத்தை அறிந்து கொள்ள முடிகிறது. நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத் திட்டம் இடை நிடுவில் நின்றால் பாரிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிடும் என்பதை மக்கள் தற்போது உணர்ந்து வருகின்றனர்.”

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித்த சேனாரத்ன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு கோரி கடந்த 7ஆம் திகதி முதல் வீடுவீடாக செல்ல ஆரம்பித்தோம். இந்த வேலைத்திட்டத்தில் ரணில் விக்கிரமசிங்கவும் நிகழ்நிலை ஊடாக தொடர்புகொண்டுவருகிறார். அதன்போதுதான் ஜனாதிபதிக்கு எந்தளவு மக்களின் ஆதரவு இருக்கிறது என்பதை எம்மால் உணர்ந்துகொள்ள முடியுமாகியது.

தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என எந்த முடிவும் எடுக்காமல் மௌனமாக இருந்தவர்களே தற்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முன்வருகிறார்கள்.

எமது இந்த வேலைத்திட்டத்தை பார்த்துக்கொண்டு மக்கள் விடுதலை முன்னணியும் வீடுவீடாக சென்று, தங்களின் வெற்றி உறுதியாகியுள்ளது, அதனால் தனிப்பட்டு விடாமல் தங்களுடன் இணைந்துகொள்ளுமாறு தெரிவித்து வருகிறது. யாழ்ப்பாணத்துக்கு சென்ற அனுரகுமார திஸாநாயக்கவும் இவ்வாறே தமிழ் மக்களை எச்சரிக்கும் வகையில் தெரிவித்திருந்தார்.

மக்கள் விடுதலை முன்னணி தற்போது தேசிய மக்கள் சக்தி என்ற பெரில் வந்தாலும் அவர்களின் உண்மையான கொள்கையே தற்போது வெளிப்பட்டு வருகிறது. அதேநேரம் இவர்கள் வீடுகளுக்கு சென்று அங்குள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையை பதிவு செய்துகொண்டு, அதன் பின்னர் அந்த எண்ணிக்கையை கணிப்பீடாக அறிவிக்கின்றனர்.

1982 ஆம் ஆண்டு றோஹண விஜேவீர ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டபோதும் இவ்வாறு வீடு வீடாக சென்று, அங்குள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையை குறிப்பிட்டுக்கொண்டு, தேர்தலில் 14 லட்சம் வாக்குகளை பெறுவதாக அறிவிப்பு செய்து வந்தார்கள்.

றொஹண விஜேவீரவின் தேர்தல் பிரசாரக்கூட்டங்களுக்கும் இன்று போல் அதிகமான மக்கள் கூடுவார்கள். ஆனால் இறுதியில் வாக்கு எண்ணும் போது றோஹண விஜேவீரவுக்கு இரண்டு இலட்சத்தி 70 ஆயிரம் வாக்குகளே செலுத்தப்பட்டிருந்தன. இதன் பின்னரும் இந்த வழியில் சென்றால் ஒருபோதும் வெற்றிபெற முடியாது என்று உணர்ந்த றோஹண விஜேவீர, அதன் பின்னரே வன்முறையை கையில் எடுக்க ஆரம்பித்து, 88 காலப்பகுதியில் அது தீவிரமடைந்தது.

அதேநேரம், மக்கள் விடுதலை முன்னணியின் தேர்தல் பிரசாரங்களுக்கு அதிகமான மக்கள் ஒன்று கூடுவது வழமை. ஆரம்ப காலத்தில் இருந்து அது இடம்பெறுகிறது. ஏனெனில் அந்த கட்சி ஆதரவாளர்களிடம் இருக்கும் ஒரு பண்புதான், மக்கள் விடுதலை முன்னணியின் கூட்டம் எங்கு இடம்பெற்றாலும் அந்த கூட்டத்துக்கு அவர்கள் செல்வார்கள்.

இந்த பண்பு வேறு எந்த கட்சியிலும் காணமுடியாது. அதனால் மக்கள் விடுதலை முன்னணியின் கூட்டங்களில் மக்கள் அதிகமாக கூடுவது தொடர்பில் பெரிதளவில் அலட்டிக்கொள்ள தேவையில்லை.

அத்துடன், ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெறாவிட்டால், அனைத்து வேலைத்திட்டங்களும் பாதிக்கப்பட்டு, நாடு மீண்டும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் என்ற அச்சம் மக்களிடம் ஏற்பட்டுள்ளது. அதேநேரம் உலகில் வங்குறோத்து அடைந்த ஒரு நாடு இரண்டு வருடங்களில் இயல்பு நிலைக்கு வந்தது என்றால் அது இலங்கை மாத்திரமாகும்.

ரணில் விக்கிரமசிங்கவே அதற்கு காரணமாவார். இந்தத் திருப்பம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் உட்பட உலக நாடுகளின் பொருளாதார நிபுணர்கள் ஆச்சரியப்படுகின்றனர். அதனால், மக்கள் சரியான தீர்மானத்தை எடுப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.” – என்றார்.






# திருக்கோவிலில் ரணிலின் பிரசாரம்

அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று புதன் கிழமை "ரணிலால் இயலும்" வெற்றிப் பேரணி நடைபெற்றது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் பேரணியில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

























# புத்தளத்தில் சஜித்தின் பரப்புரை

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த 43 ஆவது மக்கள் வெற்றி பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் புத்தளத்தில் முன்னெடுக்கப்பட்டது. இதில் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் முக்கிஸ்தர்கள் மற்றும் ஆதரவாளர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.







## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால் இப்போது கட்சி குழப்பத்தில் உள்ளது. கட்சியின் தலைவர்களில் ஒருவரான சிறிதரன் எம்.பி. கட்சி நிலைப்பாட்டுக்கு மாறாக சங்கு ஊதும் பிரசாரத்தில் இறங்கி 'ஸேம் ஸைட்' கோல் அடிக்கும் முயற்சியில் இருக்கின்றார். ஆயினும், அதை ஒளிவு மறைவின்றி பகிரங்கமாக – வெளிப்படையாகச் செய்கின்றார். சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பியோ அரங்கிற்கு வராமல் – வெளியே பகிரங்கப்படுத்தாமல் – ரணில் விக்கிரமசிங்கவுடன் 'கள்ளக் காதல்' போல, அவருக்காக அம்சடக்காக பிரச்சாரக் காய் நகர்த்தல்களை முன்னெடுக்கின்றார். ஆனால் இருவர் செய்வதுமே ரணில் விக்கிரமசிங்கவைத் திருப்திப்படுத்தும் கைங்கரியம்தான் என்பது மக்களுக்கு விளங்காததல்ல.

கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவோ 'சணம் பித்தம் சணம் வாதம்' என்று பல்டி 'மூட்'டில்தான் எப்போதும் இருக்கின்றார்.

இந்தச் சீத்துவத்தில் கட்சி என்ன செய்யப் போகின்றது? சுமந்திரன் எம்.பியும், சாணக்கியன் எம். பியும் மட்டும்தான் மத்திய குழுவின் முடிவின் பிரகாரம் தத்தமது பிரதேசங்களில் தமது ஆதரவாளர்கள் மூலம் வீடுகளில் பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர்.

திருகோணமலை குகதாசனும், அம்பாறை கலையரசனும் 'மதில் மேல் பூனையாக' தந்திர அரசியல் செய்கின்றனர்.

எனினும், கட்சியின் செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் நேற்று முன்தினம் திகதியிட்டுக் கட்சியின் ஒவ்வொரு மாவட்டக் கிளைத் தலைவர் மற்றும் செயலாளர்களுக்கு கட்சியின் நிலைப்பாட்டை உத்தியோகபூர்வமாக அறியத் தந்திருக்கின்றார்.

'ஜனாதிபதி தேர்தல் – 2024; மத்திய செயற்குழு தீர்மானங்கள்' என்ற தலைப்பில் அனுப்பப்பட்டுள்ள இது தொடர்பான கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:–

மேற்சொன்ன விடயம் சம்பந்தமாக பல கூட்டங்களில் ஆராய்ந்த பின் இறுதியாக கடந்த 01.09.2024 அன்று வவுனியாவில் கூடிய மத்திய செயற்குழு, பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது:–

1. தமிழ் பொது வேட்பாளராக போட்டியிடுகின்ற திரு. அரியநேத்திரனை ஆதரிப்பதில்லை.

2. திரு. அரியநேத்திரனை தேர்தலில் இருந்து விலகுமாறு கோருதல்.

3.ஜனாதிபதி தேர்தல் 2024 இல் திரு.சஜித் பிரேமதாஸவை எமது கட்சி ஆதரிக்கும்.

மேற்சொன்ன கட்சியின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் 14.09.2024 தினத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த மத்திய செயற்குழுக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் அறியத் தருகிறேன்.

– இப்படிக் கூறப்பட்டுள்ள அந்தக் கடிதத்தின் பிரதி கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசாவுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இக்கடிதம் கிடைத்த பின்னர் மாவட்ட மட்டத்தில் கட்சி எடுக்கும் நடவடிக்கைகளை அவதானிக்கவும் பின்னர் பரிசீலிக்கவும் கட்சி மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

மத்திய குழுவின் முடிவை ஏற்று நடக்கும் கட்சி பிரமுகர்கள், மீறி நடக்கும் பிரமுகர்கள் குறித்து எல்லாம் தேர்தலின் பின்னர் முடிவு செய்யப்படும் எனத் தெரிகிறது.

கட்சி நிலைப்பாட்டுக்கு அமைய தேர்தல் பிரச்சாரத்திற்கென தயாரிக்கப்படும் பிரசுரங்கள் மற்றும் வெளியீடுகளை கட்சியின் மாவட்ட தலைவர்கள் மற்றும் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கவும், அவை தொடர்பில் அவர்களின் நடவடிக்கைகளை மதிப்பீடு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

எல்லா ஆட்டங்களும் இன்னும் பத்து நாள்களில் பெறுபேறுகளுடன் முடிவுக்கு வரும். அப்போது பார்க்கலாம்.

## தேர்தல் தோல்வியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிகரித்து மக்களை அழுத்தத்துக்கு உட்படுத்துகின்ற கொள்கைத் திட்டமொன்றைப் பின்பற்றுகின்றார். அத்தோடு என்னைத் தோல்வியடையச் செய்து அநுரகுமார திஸாநாயக்கவை வெற்றியடையச் செய்வதற்கு அநுரகுமாரவுடன் வித்தியாசமான கூட்டமைப்பு ஒன்றையும் ரணில் ஏற்படுத்திக்கொண்டுள்ளார். எனவே, ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைவார் என்பதனை ரணில் ஏற்றுக்கொண்டுள்ளார்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த 43 ஆவது மக்கள் வெற்றி பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் புத்தளத்தில் முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"ரணிலும் அநுரவும் சிறந்த அரசியல் டீல் ஒன்றைச் செய்திருக்கின்றார்கள். அவர்களுடைய டீல் தொடர்பில் எனக்குப் பிரச்சினை இல்லை. எனக்கு 220 இலட்சம் மக்களுடனே டீல் இருக்கின்றது. இந்த மக்களை வீழ்ந்துள்ள இடத்திலிருந்து மீட்டெடுப்பதே எனது எதிர்பார்ப்பு.

சஜித் பிரேமதாஸ என்பவர் பணத்துக்காகவும், பதவிகளுக்காகவும், வரங்களுக்காகவும் விலை போகின்றவர் அல்லர். 220 இலட்சம் மக்களின் நம்பிக்கையை வென்றவராக ஆத்ம கௌரவத்தைப் பாதுகாத்துச் செயற்படுகின்ற ஒருவராவார்." – என்றார்.

## தமிழீழக் கனவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சபைகளுக்குப் பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கமாட்டோம்.

அனைத்து மக்களினதும் மதம் மற்றும் கலாசார உரிமைகள் பாதுகாக்கப்படும்.

முதலீடு என்ற போர்வையில் தேசிய வளங்களை விற்பனை செய்யும் சூழ்ச்சி நடவடிக்கைக்கும் இடமளிக்கமாட்டோம்." – என்றார்.

## சஜித், அநுர வந்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டின் பொருளாதாரம் மீண்டும் சீர்குலைந்தால் நாட்டின் எதிர்காலம் தொடர்பில் எவராலும் நம்பிக்கை வைக்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற "ரணிலால் இயலும்" வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் பேரணியில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

இந்த மக்கள் பேரணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில்,

"நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும்போது திருக்கோவில் பகுதியையும் பலப்படுத்துவோம்.

நாட்டின் பொருளாதாரம் சரிவடைந்த வேளையிலேயே நாட்டை ஏற்றேன். 2022 ஆம் ஆண்டு அத்தியாவசியப் பொருட்கள் ஒன்றும் எமக்கு கிடைக்கவில்லை. மின்சாரமும் இருக்கவில்லை. கஷ்டங்களுடன் வாழ்ந்தோம். பெண்கள் அதனை மறந்திருக்க வாய்ப்பில்லை. அன்று இப்போதிருக்கும் முன்னேற்றம் கிட்டும் என்று நினைக்கவில்லை.

அநுரவும் சஜித்தும் அன்று இருக்கவில்லை. ஆனால், நான் ஏற்றதால் நாட்டில் தட்டுப்பாடுகள் நீங்கி நல்ல நிலைமை காணப்படுகின்றது. அதனால் மக்கள் சுமுகமாக வாழ முடிந்துள்ளது. அன்று பொருட்களின் விலை அதிகரித்துக் காணப்பட்டது. ரூபாவின் பெறுமதி பெருமளவில் அதிகரித்திருந்தது.

இன்றும் மக்கள் வாழ்க்கை சுமைகளுக்கு முகம் கொடுக்கின்றார்கள். இருப்பினும் எனது முயற்சிகள் ரூபாவின் பெறுமதியை அதிகரிக்கச் செய்தமையால் ஓரளவு சுமுகமான நிலைமை வந்திருக்கின்றது. பொருட்களின் விலையும் குறைந்திருக்கின்றது.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவே மக்கள் மீது சில சுமைகளை சுமத்த வேண்டியிருந்தது. சர்வதேச நாணய நிதியம் எமது கடன் சுமை அதிகரித்தால் நாட்டின் நெருக்கடி மேலும் உக்கிரமடையுமென அறிவுறுத்தியது. நான் மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக மொத்த தேசிய உற்பத்தியில் 5 சதவீத கடனை மட்டும் பெறுவதற்கு மாத்திரம் அனுமதி கிடைத்தது. இந்த கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலேயே முன்னேற்றங்களை ஏற்படுத்தினோம். அதற்காகவே மக்களுக்கு நிவாரணங்களை வழங்கினோம்.

அடுத்த ஐந்து வருடங்களில் சுமையை மேலும் குறைக்க எதிர்பார்க்கின்றோம். பொருட்களைக் கொள்வனவு செய்யவும் வாய்ப்பளிப்போம். இந்தப் பகுதியை அபிவிருத்தி செய்ய எதிர்பார்த்திருக்கின்றோம். விவசாய நவீனமயப்படுத்தல் செயற்பாடுகளை இங்கும் முன்னெடுக்கலாம்.

திருக்கோவில் பகுதியிலும் விவசாய அபிவிருத்திக்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். இங்குள்ள கடல் வளத்தினாலும் பயனடைய முடியும். மீன்பிடித் தொழில், சுற்றுலாத்துறை, கனிய வள வர்த்தகத்தைப் பலப்படுத்த எதிர்பார்க்கின்றோம். விவசாயத்தை நவீனமயப்படுத்தி உலக உணவு உற்பத்தியில் பங்கெடுப்போம். திருகோணமலையில் பாரிய முதலீட்டு வலயத்தை உருவாக்குவோம். நாட்டின் அபிவிருத்தியை விரிவுபடுத்துவோம்.

மாகாண சபையை செயற்படுத்தி இப்பகுதி மக்களின் அபிவிருத்திக்கும் இளையோருக்கு நம்பிக்கை தரும் நாட்டையும் கட்டியெழுப்ப வேண்டும். இன்றைய சிறுவர்களுக்கு 25 வயதாகும் போது அவர்கள் முன்னேற்றமடைந்த நாட்டில் வாழ வேண்டும் என்பதே எமது இலக்காகும்.

சஜித்தினாலும், அநுரவினாலும் அதனைச் செய்ய முடியாது. வாய் பேச்சினால் எவர் வேண்டுமானாலும் சாதிக்கலாம். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அவர்களால் முடியாது. எனவே, பொருளாதார வீழ்ச்சியை விரும்பாதவர்கள் செப்டெம்பர் 21 ஆம் திகதி சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களியுங்கள் இல்லாவிட்டால் சிலிண்டரும் இருக்காது, திருக்கோவிலுக்கு அபிவிருத்தியும் கிட்டாது."

– என்றார்.



# கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட மூவர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட மூவர் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அவர்கள் மாளிகாகந்த நீதிவான் லோச்சனீ அபேவிக்ரம முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதற்கமைய, தலா 50 லட்சம் ரூபா பெறுமதியான 2 சரீரப்பிணைகள் மற்றும் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணையின் அடிப்படையில் அவர்களை விடுவிப்பதற்கு நீதிவான் உத்தரவிட்டார்.

கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 3 சந்தேகநபர்களும் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதாகவும் அவர்கள் கடுமையான உளநலப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ள தாகவும் முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதிவான், அதனை விசேட காரணமாக கருதி சந்தேக நபர்களை நிபந்தனைகளின் அடிப்படையில் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார்.

தரமற்ற நோயெதிர்ப்பு மருந்துகளை நாட்டின் வைத்தியசாலை கட்டமைப்பிற்குள் பகிர்ந்தளித்த சம்பவம் தொடர்பில் கடந்த 8 மாதங்களாக கெஹெலிய ரம்புக்வெல்ல விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## சுகாதார, மகளிர் ராஜாங்க அமைச்சராக சீதா அரம்பேபொல சத்தியப்பிரமாணம்!

விசேட வைத்திய நிபுணர் சீதா அரம்பேபொல, சுகாதாரம், சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் சத்தியப்பிரமாண நிகழ்வு இடம்பெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவு தெரிவித்த காரணத்தினால் சுகாதாரம், சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சராக பதவி வகித்த கீதா குமாரசிங்க நேற்று முன்தினம் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.




## 350 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு!

சிறு குற்றங்களுக்காக சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட 350 கைதிகளுக்கு விசேட பொதுமன்னிப்பு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்று அனுஷ்டிக்கப்படவுள்ள தேசிய சிறைக் கைதிகள் தினத்தை முன்னிட்டு இவ்வாறு பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது.

அரசமைப்பின் 34 ஆவது சரத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைவாக ஜனாதிபதியால் விசேட பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.



# தபால் வாக்களிக்க இன்றும் சந்தர்ப்பம்

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தபால்மூல வாக்கை இதுவரை அளிக்காதவர்கள் இன்றும் வாக்களிக்க சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

காலை 8.30 முதல் மாலை 4.30 வரை தத்தமது மாவட்ட செயலக அலுவலகத்தில் தபால்மூல வாக்கை அளிக்க முடியுமென தேர்தல்கள் ஆணைக் குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தபால்மூலம் வாக்களிக்க தகுதிபெற்ற அரச உத்தியோகத்தர்கள் வாக்களிப்பதற்காக இதற்கு முன்னர் 04, 05 மற்றும் 06 ஆம் திகதிகளில் அவரவர் பணிபுரியும் அரச நிறுவனங்களில் அமைக்கப்பட்டிருந்த தபால் மூல வாக்களிப்பு நிலையங்களில் வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டிருந்தது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் 736,589 அரச உத்தியோகத்தர்கள் தபால்மூலம் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர்.

இதனிடையே தபால்மூல வாக்களிப்பு நடவடிக்கையால் இன்றும் மாவட்ட செயலகங்களை அண்மித்த பகுதிகளில் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



# 80 வீதமான உத்தியோகபூர்வ வாக்குச்சீட்டுகள் தேர்தல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைப்பு!

80 வீத உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டுகள் மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விசேட பாதுகாப்புடன் அவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, உத்தியோகபூர்வ வாக்குச்சீட்டுகளை அச்சடிக்கும் பணிகளை இவ்வார இறுதிக்குள் நிறைவு செய்ய திட்டமிட்டுள்ளதாக அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை வீடுகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பாலின சமத்துவம்

பாலின சமத்துவம் குறித்து நாம் அதிகம் பேசுகிறோம். 'ஆணுக்கு நிகர் பெண்' என்று கூறவும் நாம் பின்னிற்பதில்லை. ஆயினும், பாலின சமத்துவத்தைப் பேணுவதில் நமது நாடு பெரிதும் பின் தங்கிய நிலையில்தான் தொடர்ந்து உள்ளது என்பதே நிஜம். பெண்களுக்கு எதிரான பாகுபாடு மிக மோசமாக நீடிக்கின்றது.

பாலின சமத்துவம் ஓர் அடிப்படை உரிமை மட்டுமல்ல, அது, அமைதியான - வளமான - மகிழ்ச்சியான - நீதியான - அர்த்த புஷ்டியான - ஒரு சமூக கட்டமைப்புக்கு அடிப்படையும் அத்தியாவசியமும் கூட. ஆயினும், அந்த உரிமை மறுப்பு நமது இலங்கை சமுதாயத்தில் பெரும் பிணியாகத் தொடர்கின்றது.

பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களின் வலுவூட்டலுக்காக ஐக்கிய நாடுகள் சமவாயங்கள், சர்வதேச பட்டயங்கள், மனித உரிமை பிரகடனங்கள் என பல கட்டமைப்புகள் வந்துவிட்டன. அவற்றில் எல்லாம் இலங்கை ஒப்பமிட்டுள்ளது.

ஆனால், நாட்டில் நடைமுறையில் அந்தப் பால் நிலை சமத்துவமும் பெண்களின் வலுவூட்டலும் காரிய சாத்தியமாக வில்லை என்பதுதான் உண்மை.

இந்தப் பாலின சமத்துவ நீதி முதலில் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் அரசியலில் இருந்து தொடங்க வேண்டும்.

உலகின் முதல் அரசுத் தலைவராக பெண் ஒருவரைக் கொண்டிருந்த நாடு என்ற பெருமை இலங்கைக்கு உண்டு. சிறிமாவோ பண்டாரநாயக்கா அந்தப் பெருமையை நிலைநாட்டினார். அவரின் மகள் சந்திரிகா குமாரதுங்க சுமார் 11 ஆண்டுகள் நாட்டின் தலைவியாக இருந்தார்.

ஆயினும், இலங்கை அரசியலில் பாலின சமத்துவம் நிலைநிறுத்தப்படவே இல்லை என்பதுதான் உண்மை.

இப்போது நாட்டின் நிறைவேற்றதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடக்கின்றது. 38 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். ஆனால் அவர்களில் ஒருவர் கூட மகளிர் அல்லர்.

இலங்கையின் ஒரு கோடி எழுபது லட்சம் வாக்காளர்களில் 52 விதமானோர் பெண்கள். ஆயினும் அரசியலில் மகளிருக்கு உரிய இடம் - முக்கியத்துவம் - வழங்கப்படவேயில்லை.

நமது நாடு வாக்குரிமையை 1931இல் சகலருக்கும் வழங்கியது. இந்த 93 வருடங்களும் மகளிர் பிரதிநிதித்துவம் குறிப்பிடத்தக்களவு வீதத்தை கூட எட்டவேயில்லை என்பதுதான் கசக்கும் உண்மையாகும்.

இந்த 93 ஆண்டுகால ஜனநாயக சரித்திரத்தில் மகளிர் பிரதிநிதித்துவம் ஏழு விதத்துக்கு மேல் எப்போதும் கூடவே இல்லை.

தற்போதைய நாடாளுமன்றத்தில் கூட மகளிர் பிரதிநிதித்துவம் ஆக 5.3 வீதம்தான். 225 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆக 13 எம்.பிக்கள்தான் பெண்களாக உள்ளனர். அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவர். இரண்டொரு இராஜாங்க அமைச்சர்கள். அவ்வளவுதான் மகளிருக்கான இடம்.

2016 இல் சட்டங்களின் மூலம் உள்ளூராட்சி சபைகளுக்கான பிரதிநிதித்துவத்தில் 25 வீதம் - காற்பங்கு - மகளிருக்குக் கட்டாயம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனாலும் அதை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது் வேண்டியிருக்கின்றது என்பது முற்றிலும் உண்மை.

குழந்தை பெறுவதும், குடும்பத்தை கவனிப்பதுதான் மகளிர் பணி என்ற பின்னடைவான சிந்தனையிலிருந்து சமூகம் விடுபட்டு, தாய்க்குலத்துக்கு சரியான - சரி சமமான - பங்களிப்பை வழங்குவதற்கு முன்வந்தால் மட்டுமே பாலின சமத்துவம் சாத்தியமாகும்.

பாலின சமத்துவம் சாத்தியமாகும் வரை மனித இனம் உயர்ந்த சமூகக் கட்டமைப்போடு திகழ்கின்றது என்று கூறுவது எப்போதும் பொய்யாகவே இருக்கும்.

# தமிழக மீனவர்களின் படகு கவிழ்ந்தது; இலங்கை கடற்படை மீது குற்றச்சாட்டு





தமிழக மீனவர்களின் படகு மீது இலங்கை கடற்படையினர் தங்களின் கப்பலை விட்டு மோதி படகை கவிழ்த்தனர் என பாதிக்கப்பட்ட மீனவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

நாகை மாவட்டம் செருதூர் மீனவ கிராமத்தைச் சேர்ந்த தர்மன் என்பவருக்குச் சொந்தமான ஃபைபர் படகில் கடந்த 9 திகதியன்று அதே பகுதியைச் சேர்ந்த சக்திவேல், தேவராஜ், கார்த்திகேயன், சதீஷ் ஆகிய 4 மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க சென்றனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் மாலை அவர்கள் கோடியக்கரைக்கு தென்கிழக்கே மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களின் படகின் மீது கடற்படை கப்பலைக் கொண்டு மோதினர் என கூறப்படுகிறது.

கப்பல் மோதியதில் தமிழக மீனவர்களின் ஃபைபர் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் கடலில் காயங்களுடன் வலைகளில் சிக்கி மீனவர்கள் தத்தளித்துள்ளனர். இதைத்தொடர்ந்து மீனவர்களை தங்களது கப்பலில் ஏற்றிய இலங்கை கடற்படையினர், அவர்களுக்கு முதலுதவி சிகிச்சை எதுவும் செய்யாமல் சுமார் 6 மணி நேரமாக அவர்களை மிரட்டி விசாரணை நடத்தியுள்ளனர்.

அப்போது, தங்கள் எல்லைக்குள் தான் மீன்பிடித்தோம் என தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படை அதிகாரிகளிடம் கெஞ்சியதாக கூறப்படுகிறது. அதன் பின்னர் அங்கு வந்த சக தமிழக மீனவர்களிடம் செருதூர் மீனவர்களை ஒப்படைத்த இலங்கை கடற்படை அதிகாரிகள், அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர். அதன் பின்னர் சக மீனவர்களின் உதவியோடு நடுக்கடலில் கவிழ்ந்த தங்களது படகை மீட்ட நாகை மீனவர்கள் காயங்களுடன் நேற்று காலை கரை திரும்பியுள்ளனர்.

இலங்கை கடற்படை அதிகாரிகள் கப்பலை கொண்டு மோதியதில், படகில் இருந்த வலை, ஜி.பி.எஸ். கருவி, கையடக்க தொலைபேசி, மீன் பிடி பொருள்கள் என 6.50 லட்சம் ரூபா மதிப்பிலான பொருள்கள் கடலில் விழுந்து மூழ்கியதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, செருதூர் மீன் இறங்குதளம் வந்து சேர்ந்த காயமடைந்த மீனவர்கள் சிகிச்சைக்காக ஒரத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். தமிழக மீனவர்கள் மீது இலங்கை மீனவர்களும் இலங்கை கடற்படையினரும் மாறி மாறி தாக்குதல் நடத்திவருவது தமிழக மீனவர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சீக்கியர்கள் குறித்த ராகுல் காந்தியின் கருத்துக்கு காலிஸ்தான் பிரிவினைவாதி பன்னுன் ஆதரவு





இந்தியாவில் சீக்கியர்களின் நிலை குறித்த, மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் முக்கியத் தலைவருமான ராகுல் காந்தியின் கருத்துக்கு, அமெரிக்காவில் இருந்து செயல்பட்டு வரும் காலிஸ்தான் பிரிவினைவாதி குருபத்வந்த் சிங் பன்னுன் ஆதரவு தெரிவித்துள்ளார்.

இது குறித்து குருபத்வந்த் சிங் பன்னுன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“வொஷிங்டன் டிசி-யில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய ராகுல் காந்தி, காலிஸ்தான் அமைப்பின் பிரச்சாரத்தை நியாயப்படுத்தும் வகையில் பேசி இருந்தார். ‘இந்தியாவில் ஒரு சீக்கியர் தலைப்பாகை மற்றும் கடா அணிய அனுமதிக்கப்படுவார்களா? குருத்வாராவுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்களா?’ என ராகுல் கூறி இருந்தார்.

இந்தியாவில் சீக்கியர்களுக்கு நிலவும் அச்சுறுத்தல் குறித்து ராகுல் காந்தி வெளிப்படையாக பேசியது துணிச்சல் மிக்க உரை மட்டுமல்ல. அது கடந்த 1947 முதல் இந்தியாவில் சீக்கியர்கள் எதிர்கொண்டு வரும் உண்மையை அடிக்கோடிட்டு காட்டுகிறது. மேலும், சீக்கியர்களுக்காக காலிஸ்தான் தேசத்தின் கோரிக்கைக்கான நோக்கத்தையும் உரக்கச் சொல்கிறது” என்று பன்னுன் தெரிவித்துள்ளார்.

காலிஸ்தான் தனி நாடு கோரும் சீக்கியர்களுக்கான நீதி எனும் அமைப்பின் தலைவரான குர்பத்வந்த் சிங் பன்னுன், அமெரிக்கா மற்றும் கனடாவின் குடியுரிமையைப் பெற்றவர். இவர் இந்தியாவுக்கு எதிராக தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். இந்தியாவால் பயங்கரவாதி என அறிவிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, காங்கிரஸ் முன்னாள் தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். அவர் வெர்ஜினியாவில் புலம் பெயர்ந்தஇந்தியர்களுடன் உரையாடும்போது, “இந்தியாவில் நடைபெற்றும் வரும் போர் என்பது சீக்கியர்கள் தலைப்பாகை அணிய அனுமதிக்கப்படுவார்களா, மாட்டார்களா என்பது பற்றியதே.” - என்றார்.

இதற்கு பா.ஜ.க. கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக டில்லியில் பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் ஆர்.பி.சிங் கூறும்போது,

டில்லியில் 3,000 சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் தலைப்பாகை அகற்றப்பட்டது. தலைமுடி வெட்டப்பட்டது. தாடி மழிக்கப்பட்டது. காங்கிரஸ் ஆட்சியில் இதெல்லாம் நிகழ்ந்தது பற்றி ராகுல் கூறவில்லை. சீக்கியர்கள் பற்றி அமெரிக்காவில் கூறியதை இந்தியாவில் மீண்டும் கூற முடியுமா என ராகுல் காந்திக்கு சவால் விடுகிறேன். ராகுல் அவ்வாறு கூறினால், அவர் மீது வழக்கு தொடர்வேன். அவரை நீதிமன்றத்துக்கு இழுப்பேன்.” - என்றார்.

# விண்வெளியில் தனது பிறந்தநாளை கொண்டாடுகிறார் சுனிதா வில்லியம்ஸ்




இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் மற்றும் சக வீரரான புட்ச் வில்மோர் ஆகியோர் கடந்த மே 5 ஆம் திகதி ஸ்டார் லைனர் விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி மையத்துக்குச் சென்றனர்.

அவர்கள் இருவரும் திட்டமிட்டபடி கடந்த மே மாதம் 22 ஆம் திகதி பூமிக்குத் திரும்பியிருக்க வேண்டும்.

ஆனால், ஸ்டார் லைனர் விண்கலத்தில் ஹீலியம் வாயு கசிவு மற்றும் உந்து விசை கருவியில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாகப் பூமிக்குத் திரும்புவதில் சிக்கல் உருவானது.

தொழில்நுட்ப கோளாறுகளை சரிசெய்து இவர்கள் பூமி திரும்ப அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் ஆகும் என தெரிய வந்துள்ளது.

இதற்கிடையே, சுனிதா வில்லியம்ஸ் 2 ஆவது முறையாக விண்வெளியில் தனது பிறந்தநாளைக் கொண்டாட உள்ளார்.

அதன்படி, சுனிதா வில்லியம்ஸ் இம்மாதம்19 ஆம் திகதி தனது 59 ஆவது பிறந்தநாளைக் கொண்டாட உள்ளார்.

இதற்கு முன்பு, கடந்த 2012 ஜூலை முதல் நவம்பர் வரை அவர் விண்வெளியிலிருந்தபோது தன்னுடைய பிறந்த நாளை முதல்முறையாக அங்குக் கொண்டாடினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மூன்றாம் உலகப் போர் உருவாகும்: டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கிறார்




அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களான டொனால்ட் ட்ரம்ப் மற்றும் கமலா ஹாரிஸ் முதன்முறையாக நேற்று நேரடி விவாதத்தில் பங்கேற்றனர்.

விவாதத்தின்போது இருவரும் தங்களது கருத்துகளைத் தெரிவித்தனர்.

குறிப்பாக இந்த விவாதத்தில், இஸ்ரேல் – ஹமாஸ் போர், உக்ரைன் – ரஷியா இடையேயான போர், அமெரிக்காவின் பணவீக்கம் மற்றும் கருக்கலைப்பு விவகாரம் உள்ளிட்ட விடயங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

இதன்போது கருத்து தெரிவித்த டொனால்ட் ட்ரம்ப்,

“பைடன் ஆட்சியில் பணவீக்கத்தால் மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். அவரது ஆட்சியில் கடந்த 4 ஆண்டுகளாகப் பொருளாதாரம் மோசமான நிலையில் இருந்தது.

நான் ஆட்சிக்கு வந்தால் வரியைக் குறைத்து பொருளாதாரத்தை மேம்படுத்துவேன். கமலா ஹாரிஸ் ஒரு கம்யூனிஸ்ட். அவரிடம் எந்த திட்டமும் இல்லை.

கமலா ஹாரிஸ் ஜனாதிபதியானால் அமெரிக்காவில் கச்சா எண்ணெய் உற்பத்தி நின்றுவிடும்.

அமெரிக்கா தற்போது செல்லும் பாதையில் தொடர்ந்து பயணித்தால் மூன்றாம் உலகப் போர் உருவாகும்.” – என்றார்.




# அதானி குழுமத்திற்கு எதிர்ப்பு; நைரோபி விமான சேவை பாதிப்பு




கென்யா – நைரோபியில் உள்ள ஜோமோ கென்யாட்டா சர்வதேச விமான நிலையத்தை அதானி குழுமத்திற்குக் குத்தகைக்கு விடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து விமான நிலைய ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விமான நிலையத்தை 30 ஆண்டுகளுக்கு நிர்வகிக்கும் ஒப்பந்தத்தை இந்தியாவைச் சேர்ந்த அதானி குழுமத்திற்கு வழங்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

தொழிலாளர்களின் எதிர்ப்பையும் மீறி இந்த ஒப்பந்தத்திற்குக் கென்யாவின் ஜனாதிபதி வில்லியம் ருட்டோ ஆதரவு தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், விமான நிலையத்தை அதானி குழுமத்திற்குக் குத்தகைக்கு விடும் முடிவிற்கு எதிர்ப்பு தெரிவித்து ஜோமோ கென்யாட்டா விமான நிலைய ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் நேற்று முன்தினம் இரவு ஆரம்பித்த இந்த போராட்டம் காரணமாக நைரோபியில் விமான சேவை பாதிக்கப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.






# தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகள் அதிகரிப்பு

ஜனாதிபதி தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை 3,406 ஆக அதிகரித்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் மாலை வரையான காலப்பகுதியிலேயே இந்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அதேநேரம், நேற்று முன்தினம் மாத்திரம் ஜனாதிபதி தேர்தலுடன் தொடர்புடைய 183 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதுவரையில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில், 2,638 முறைப்பாடுகள் தொடர்பில் தீர்வு காணப்பட்டுள்ளதாகவும், மிகுதி 768 முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.




# மோட்டார் வாகன திணைக்களத்தின் பிரதான அலுவலகம் 20 இல் பூட்டு!

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தினை எதிர்வரும் 20 ஆம் திகதி மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பு நிலையமாக மேற்படி அலுவலகம் செயற்படவுள்ளமையால் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, தேர்தல் நடவடிக்கைகளை இடையூறின்றி நடத்துவதற்கு ஏதுவாக எதிர்வரும் 20 ஆம் திகதி வழமையான பணிகள் மேற்கொள்ளப்பட மாட்டாது என மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.




# இலங்கைக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி அனுமதி

நீர்வழங்கல் மற்றும் சுகாதார நல மீள் கட்டமைப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, இலங்கைக்கு முதற்கட்டமாக 100 மில்லியன் அமெரிக்க டொலரை கடனாக வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி அனுமதி வழங்கியுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான 2 கடன் வசதிகளை ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அதன் முதலாவது வேலைத்திட்டமானகாலநிலைதாங்குதிறன், அனைத்து தரப்பினரையும் உள்வாங்கல், சுற்றாடல் பேண்தகு நிலைமையை வலுப்படுத்தல் என்பவற்றுக்காக 100 மில்லியன் அமெரிக்க டொலரை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.




# 18 ஆம் திகதி அரச மருத்துவர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவர்!

எதிர்வரும் 18 ஆம் திகதி நாடளாவிய ரீதியாக பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்க அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

பதுளை பொது வைத்தியசாலையில் சேவையாற்றும் தமது சங்கத்தின் பிரதி செயலாளர் பாலித்த ராஜபக்ஷவிற்கு எதிராக முன்னெடுக்கப்படும் ஒழுக்காற்று நடவடிக்கையை நிறுத்தக் கோரி, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் இந்தப் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

நேற்று முன்தினம் கூடிய அரச மருத்துவ அதிகாரிகள் சங்க கூட்டத்தின் போது இந்தத்தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் செயலாளர் வைத்தியர் பிரபாத் சுகதபால தெரிவித்துள்ளார்.

அதேநேரம், நேற்று முதல் நாடளாவிய ரீதியாகவுள்ள சகல வைத்தியசாலைகளிலும் கறுப்புக் கொடி பறக்கவிடத் தீர்மானிக்கப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.



# கவிழப்போகின்ற கப்பலில் பயணித்து தற்கொலை செய்ய விரும்பவில்லை!

## கீதா குமாரசிங்க கூறுகின்றார்

“கவிழப்போகும் கப்பலில் ஏறி தற்கொலை செய்து கொள்ள நான் விரும்பவில்லை. சரியான பாதையில் பயணிப்பதற்காக எந்தவொரு தியாகத்துக்கும் நான் தயாராகவே இருக்கின்றேன். எனவே இராஜாங்க அமைச்சு பதவி பறிபோனதில் கவலை இல்லை.”

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதற்கு நான் எடுத்த தீர்மானம் எனது சுய உரிமையாகும். எனது 14 வருட அரசியல் வாழ்வில் கட்சி தாவும் அரசியல் மற்றும் அடிமைத்தனமான அரசியலை நான் வெறுக்கின்றேன். எவ்வித சிறப்புரிமைகளையும் பெற்றுக் கொண்டதில்லை. எனவே நான் அரசாங்கத்துக்கு பயமில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தவறான தீர்மானத்தை எடுத்தால் நாடு பெரும் அழிவை எதிர்கொள்ளும். எனவே மக்கள் பிரதிநிதி என்ற ரீதியில் அவர்களுக்கு யதார்த்தத்தை உணர்த்த வேண்டியது எனது கடமையாகும். எனக்கு யாரும் அழுத்தம் பிரயோகிக்கவில்லை. இது நான் சிந்தித்து எடுத்த தீர்மானமாகும்.

ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக நான் வாக்களித்திருக்கின்றேன். ஆனால் அவர் என்னை இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியிருக்கின்றார். பதவிக்காக ரணிலுக்கு தேவையான தீர்மானத்தை என்னால் எடுக்க முடியாது. அதற்கான அவசியமும் இல்லை. சஜித் வெற்றி பெறுவார் என்பதால்தானே நீங்கள் அங்கு சென்றீர்கள் என்று என்னிடம் கேட்கின்றனர். அதுவே உண்மையாகும்.

கவிழப்போகும் கப்பலில் ஏறி தற்கொலை செய்து கொள்ள நான் விரும்பவில்லை. சரியான பாதையில் பயணிப்பதற்காக எந்தவொரு தியாகத்துக்கும் நான் தயாராகவே இருக்கின்றேன். எனவே இராஜாங்க அமைச்சு பதவி பறிபோனதில் கவலை இல்லை.

அரசியலுக்காகவே நான் சுவிட்ஸர்லாந்து குடியுரிமையையும் இழந்தேன். அதனால், எனக்கு பெரும் பொருளாதார இழப்பு ஏற்பட்டது. எனினும் அதனை விட நான் மக்களுக்கு சேவையாற்றுவதற்கே முன்னுரிமையளித்தேன்.”– என்றார்.

# தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் சிறுவர்களைப் பயன்படுத்தத் தடை

தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் சிறுவர்கள் பயன்படுத்தப்படுவது தொடர்பான காணொலிகள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வரும் நிலையில், இந்த விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

“சிறுவர்களைப் பாதுகாப்போம்“ தேசிய வேலைத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் பிரியந்த ஹேரத்தினால் இந்த முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அவர், சிறுவர்களை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்த முடியாது எனவும், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் முறைப்பாடு செய்யப்பட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் சொன்னார்.

இந்த நிலையிலேயே, தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு அளித்துள்ளதாகவும், இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே, தேர்தல் நடவடிக்கைகளில் சிறுவர்களை இணைத்துக் கொள்ள வேண்டாம் எனத் தேர்தல்கள் கண்கணிப்பு அமைப்புகள் அரசியல் கட்சிகளுக்கு அறிவுறுத்தியுள்ளன.

# மகனைக் கொன்ற தந்தையார் பொலிஸார் தீவிர விசாரணை

மகனைக் கொலை செய்து விட்டு தனது மனைவியைக் கொடூரமாகத் தாக்கிய நபர் ஒருவர் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இரத்மலானை – மாளிகாவ பகுதியில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மகனைக் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்து விட்டு, தனது மனைவியையும் அந்த நபர் கொடூரமாகத் தாக்கியுள்ளார் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக கல்கிஸைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளமையுடன், மனைவி தற்போது வைத்தியசாலையில் கிச்சைப் பெற்று வருகின்றார். தப்பியோடிய சந்தேக நபரைத் தேடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.09.2024




இன்று நீங்கள் தேவைகளை அறிந்து நடந்து கொள்வீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். உங்களின் சிறிய திட்டம் பெரிய வெற்றிக்கு வழி காட்டும்.

உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள். உங்களிடம் இன்று ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும்.

உங்கள் துணையுடன் தரமான நேரங்களை செலவழிப்பீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலை காணப்படும். இன்று பயனுள்ள சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது. இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று உங்கள் விருப்பங்களை மேம்படுத்திக் கொள்வீர்கள். வாய்ப்புகள் கிடைக்கும். அதை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வீர்கள்.

பணியில் உங்கள் செயற்றிறனை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த முயல்வீர்கள்.

இன்று சுதந்திரமான நிதிநிலை காணப்படும். இன்று வளமான நாளாக அமையும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது. இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று நீங்கள் பதற்றம் நிறைந்து காணப்படுவீர்கள். இது உங்கள் பேச்சில் வெளிப்படும். பிரார்த்தனை மற்றும் மந்திர ஜெபங்கள் மன ஆறுதலை அளிக்கும்.

பணியில் கூடுதல்பொறுப்புகள் சுமக்க நேரும். வேலை சம்பந்தமான பயணம் காணப்படும்.இன்று உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி பணிகளைக் கையாள வேண்டும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க அகந்தைப் போக்கை கவனமாகக் கையாள வேண்டும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகமாக இருக்கும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

கணுக்கால் மற்றும் தோள்களில் வலி காணப்படலாம். முறையான உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.




நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும். உங்கள் மதிப்பு மிக்க பொருளை இழக்க நேரலாம். கவனமாக இருக்கவும். இன்று திருப்தியான மன நிலை இருக்காது. அது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. கவனமுடன் உங்கள் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் பதற்ற உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் வாக்குவாதம் எழும். இந்த நடத்தையை கைவிடுங்கள்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். சிறப்பாக திட்டமிடுவதும் அதனை செயலாற்றுவதும் இன்று வெற்றியை பெற்றுத் தரும்.

உங்கள் தாயின் உடல் நலம் பற்றிய கவலை காணப்படும்.




இன்று அமைதி மற்றும் செழிப்பு காணப்படும் அனுகூலமான நாள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளுக்கு பாராட்டு கிடைக்கும். சக பணியாளர்கள் ஒத்துழைப்பார்கள்.

உங்கள் தொடர்பாடல் மூலம் உங்கள் துணையிடம் நல்லுறவை ஏற்படுத்துவீர்கள்.

நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. புதிய முதலீட்டிற்கான திட்டம் இன்று நீங்கள் மேற்கொள்ளலாம்.

உங்களிடம் காணப்படும் நேர்மறை ஆற்றல் காரணமாக இன்று ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும் நாள். சவால்கள் நிறைந்து காணப்பட்டாலும் அதனை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வீர்கள். பயணங்கள் செல்ல வாய்ப்புள்ளது.

உங்கள் பணிகளை ஒரு கொள்கையுடன் மேற்கொள்வீர்கள். அது வெற்றிக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாக நடந்து கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

பயணம் மூலம் இன்று பண வரவு ஏற்படலாம். ஆன்மீக விஷயத்திற்காக செலவு செய்ய நேரலாம்.

இன்று உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




அதிக சிந்தனைகள் காரணமாக மனதில் குழப்பம் ஏற்படலாம். இன்று வெற்றிகள் காண கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய முடியாதபடி சில தடைகள் ஏற்படும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.பணியிடத்தில் கடினமான சூழ்நிலையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் குறைந்த அளவு பேச்சு வைத்துக் கொள்ளுங்கள். உறவில் அமைதியின்மை ஏற்படாமல் இருக்க இது மிகவும் அவசியம்.

போதிய பணம் கையில் இருந்தாலும் அதனை நீங்கள் பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்ய இயலாது. வீண் செலவு ஏற்படும்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நேர்மறை எண்ணங்களுடனான அணுகுமுறை கொள்ள வேண்டும்.

கவனக் குறைவு காரணமாக பணியில் சில தவறுகளை நீங்கள் செய்ய நேரலாம். உங்கள் பொறுப்புகளை அறிந்து நடந்துகொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பாக மனம் திறந்து பேசுங்கள். இதனால் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

செலவுகள் அதிகரிக்கும். வீணான செலவுகள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.சளி மற்றும் இருமல் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவு வகைகளை மேற்கொள்வதை தவிர்க்க வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.09.2024

## தனுசு

இன்று உங்கள் இலக்குகள் நிறைவேறும். என்றாலும் முறையாக திட்டமிட்டால் இன்னும் சிறபான பலன்களைக் காணலாம்.

பணியில் உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும். கூடுதல் ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். திருமண நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியாக நேரம் கழிப்பீர்கள்.

இன்று வலுவான நிதி ஆதாரங்களை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இதனால் இன்று நீங்கள் துடிப்புடன் உற்சாகமாக இருப்பீர்கள்.

## கும்பம்

இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைவதற்கு அதைரியம் தடையாக இருக்கும்.

பணியில் கவனம் செலுத்த முடியாதபடி பதற்றம் காணப்படும். அமைதியாக பணிகளை மேற்கொண்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள் துணையுடனான கருத்து வேறுபாடு காரணமாக உறவில் அமைதியின்மை காணப்படும். இதனை சமாளிக்க வேண்டும்.

எதிர்பாராத செலவினங்கள் காணப்படும். உங்கள் நிதியை கவனமாகக் கையாள வேண்டும்.

நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினை காணப்படும். ஓய்வெடுக்க நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

## மகரம்

இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். உங்களிடம் உறுதியும் தைரியமும் காணப்படும். உங்கள் இலக்குகளை அடைவது இன்று எளிதாக இருக்கும்.

உங்கள் பணியில் வளர்ச்சி காண்பீர்கள். இன்று உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பழகுவீர்கள். இதன் மூலம் குடும்பத்தில் உள்ள பிரச்சினைகள் தீரும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகள் பூர்த்தி ஆகும். நீங்கள் சிறிய வகையிலான கடன்கள் வாங்குவீர்கள்.

ஆரோக்கியமான மனதின் காரணமாக தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். எனவே உற்சாகமாக ஆற்றலுடன் இருங்கள்.

## மீனம்

ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் மன ஆறுதலும் வெற்றியும் கிட்டும். இன்று வெற்றி காண யோசித்து செயல்பட வேண்டும்.

பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பணியில் கவனம் செலுத்த உங்கள் மனதில் உள்ள தேவையற்ற எண்ணங்களை நீக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவில் அமைதியின்மை காணப்படும். உங்கள் துணையுடன் அன்பாக நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று வரவு செலவு இரண்டும் காணப்படும். இன்று அதிக பண வரவுக்கான சாதகமான நாள் அல்ல.

அதிக உடல் உழைப்பு காரணமாக கால் வலி ஏற்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

